



11வது ஞாஞச்சாரியார்

# ஞாஞச்சாரியார்

## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்

## அவர்களின் எழுத்துக்கள்





12வது ஞாஞச்சாரியார்

**ஆனி மாத வெளியீடு**

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,112**

## ஞானசித்தன் ஆதிசங்கரன்

***'வெள்ளாடை மேனியான் உச்சிக்குடுமியான்***
***தென்பாண்டித் தமிழன், திருமூலர் குருவழி வாரிசு***
***திருவாசக தேவார சாரம் கண்டோன்***
***வடபுலத்துச் சித்தர் நெறி பரப்பியோன்***
***தமிழின் இந்துமதத்தைச் சமசுக்கிருத ஹிந்துமதமாக்கியோன்***
***சித்தர் இலக்கியம் பிருமணர் பயில வழியமைத்தோன்***
***தென்னக அருட்பேரரசுக்கு உதவியாக வடபுலத்து அருட்பேரரசு கண்டோன்'***

எனக் குருபாரம்பரியம் பாராட்டும் இமயமலேச் சாரலில் நிறைவு கொண்ட ஆதிசங்கரரின் உண்மை வரலாற்றின் சில செய்திகள் சென்ற இதழில் வெளிவந்தன. இந்த இதழில் அதன் தொடர்ச்சியைக் காணலாம்.

1. ஆதிசங்கராச்சாரியார்களுக்கும், சங்கராச்சாரியார்களுக்கும் உள்ள வேறுபாடுகள்!
2. காலடி ஆதிசங்கரன் ஒரு தமிழனே! சௌந்தரியலகிரியில் உள்ள சான்று!
3. காலடி ஆதிசங்கரர் பற்றிய சின்னச் சின்னச் செய்திகள்!
4. சித்தரடியான் நிலே விளக்கம்
5. உலககுரு, சகட குரு பற்றிய விளக்கம்.
6. காலடி ஆதிசங்கராச்சாரியாரின் திரு உருவத் தோற்றம்.
7. தமிழர்கள் மறுசிந்தனேக்கு... சித்தர் கருவூரர் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம் அமைப்பது பற்றிய விளக்கம்.
8. குருபாரம்பரியம் தரும் ஏசுநாதர் வரலாறு!

www.gurudevar.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609

**தமிழினத்தாரில் சித்தர் நெறியின் மீது ஈர்ப்பு உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை நகலெடுத்துப் பிறருக்குப் படிக்கக் கொடுக்கவும்.**

**'மெய்யான இந்து மதமும், பொய்யான ஹிந்து மதமும்' வரிசையில்...**

# ஆதிசங்கராச்சாரியாரும் சங்கராச்சாரியாரும்

பிறமண்ணினரான பிருமணர்கள் ஆதிசங்கராச்சாரியார் என்பவரும், சங்கராச்சாரியார் என்பவரும் ஒருவரே என்று கூறி வருகின்றனர். அதாவது, ஆதி-சங்கராச்சாரியார் என்பவர் [காலடி ஆதிசங்கரன்] முதலாவது நபர் என்றும்; அவரின் அடியொற்றி வந்தவர்கள் சங்கராச்சாரியார் என்றும் கூறி மிகப் பெரிய குழப்பத்தை உண்டு பண்ணுகின்றனர். ஆனால் இதைப்பற்றி மிகத் தெளிவாகப் பதினெண்சித்தர்கள் கூறும் கருத்தென்ன என்பதை ஆராய்வோம்.

ஆதிசங்கரர் என்பவர் வேறு; சங்கரர் என்பவர் வேறு. ஆதிசங்கரர் என்பவர்கள் ஒரு பிரிவினராகவும், சங்கரர் என்பவர்கள் மற்றொரு பிரிவினராகவும் தொடர்ந்து இந்து மதத்தில் வருகின்றனர். பதின்மூன்று வகை கருவழி ஆச்சாரியார்களும் [அத்திரி, இத்திரி, தோத்திரி...], 13 வகைக் குருவழி ஆச்சாரியார்களும் [பத்தர், பத்தியார்,...] தோன்றிச் செயல்படுகின்றனர். இதுவன்றி, இந்து மத கட்டுக்கோப்புக்கும், ஒழுங்கமைப்புக்கும், பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்து 48 வகை பீடாதிபதி வழி ஆச்சாரியார்களை [தெய்வீகாச்சாரியார், கடவுளாச்சாரியார்,...] கலைகளைப் பயிற்றுவிப்பதற்காகத் தோற்றுவிக்கப் படுகின்றனர். இவையன்றி எட்டுவகை ஆச்சாரியார்கள் தோன்றி இந்துமத வளர்ச்சிக்கு நாடெங்கும் சுற்றிப் பாடுபடுபவர்கள். சங்கராச்சாரியார், பரமாச்சாரியார், ஈசுவராச்சாரியார், சிவாச்சாரியார், ஆதிசங்கராச்சாரியார், ஆதிபரமாச்சாரியார், ஆதி ஈசுவராச்சாரியார், ஆதி சிவாச்சாரியார் என எண்மர் ஆவார்கள். இவர்களில் சிறப்பாக ஆதிசங்கராச்சாரியாரும் சங்கராச்சாரியாரும் ஆக இருவருமே இங்கு காண உள்ளோம்.

பதினெண் சித்தர்களின் குறிப்புப் படி, இதுவரை 40 சங்கராச்சாரியார்களும், 32 ஆதிசங்கராச்சாரியார்களும் தோன்றியுள்ளனர் என்பதே உண்மை. ஆக இவர்கள் எழுபத்திரண்டு பேரும் தமிழுணர்ந்த தமிழர்களே! தமிழினத்தில் மட்டுமேதான் இவர்கள் தோன்ற முடியும். பதினெண் சித்தர்களின் கணக்குப்படி இன்னும் பதினாறு ஆதிசங்கராச்சாரியார்களும், எட்டு சங்கராச்சாரியார்களும் தோன்ற வேண்டும், தோன்றுவர்.

இனி சங்கரருக்கும், ஆதிசங்கரர்க்கும் உள்ள வேறுபாட்டைக் காண்போம்.

சங்கரன் என்றாலே சிவன்; சிவனை வழிபடுபவர்கள் என்றே பொருள். சங்கராச்சாரியார்கள் அனைவருமே, 'தானே சிவம்; சிவமே தான்', 'எனக்குள் கடவுள், கடவுளுக்குள் நான்' என்றும், 'தானே பிறம்மம்; பிறம்மத்துள் தான்' என்னும் அத்வைதக் கொள்கையுடையவர்கள். உருவ வழிபாட்டை முழுவதுமாக வெறுத்து எதிர்த்தவர்கள். இவர்கள் நாடெங்கும் சென்றாலும்; தனி மடத்தையோ அமைப்பையோ உருவாக்குவதில்லை. கடவுள்களை, சிறு பெரு தெய்வங்களை தமது மந்திர சத்தியால் கட்டுவதில்லை. பொதுவாக வெள்ளாடையையே [ஞானத்திற்குரியது] உபயோகிப்பர்.

ஆதிசங்கராச்சாரியார்கள் உருவ வழிபாட்டை ஆதரிப்பதோடு, அனைத்துக் கோயில்களுக்கும் சென்று வழிபடுவர். சிவனை வழிபடுவதோடு சத்தியையும் இணைத்தே சத்தி சிவ [அம்மையப்பன்] வழிபாடு செய்வர். இவர்கள் சித்தாந்தவாதிகள். மண், பெண், பொன்

இவற்றை அளவோடு பயன்படுத்தி மாந்தரீக, தாந்தரீக, ஏந்தரீக பூசை செய்பவர்கள். இவர்கள் நாடெங்கும் தங்களுக்கென மடங்களை உருவாக்கி குருவழி வாரிசுகளைச் செயல்படுத்துவார்கள். இவர்கள் தங்களுடைய வலிமைக்காக சிறு பெரு தெய்வங்களை தனது மந்திர சத்தியால் கட்டுவர். இவர்கள் உச்சிக் குடுமியோடு வெள்ளாடையையே பயன் படுத்துவர்.

ஆனால், இன்றைய காஞ்சி மடத்து சங்கராச்சாரியார் முதல் அனைவரும் காலடி 'ஆதிசங்கரன் தோன்றல்' எனக் கூறி 'அத்வைத'த்தைப் போதித்துக் கொண்டே அனைத்துக் கோயில்களுக்கும் சென்று வருகின்றனர்.

---------------------

**எங்களுக்குத் தெரியும்! உங்களுக்கு!?......**

*1. மெய்யான இந்து மதத்திற்கு மேல் போக்கான வண்ணப் பூச்சாக உருவாக்கப் பட்டதுதான் பொய்யான ஹிந்துமதம். அனைத்துக்கும் ஒரே பரம்பொருள் அனைத்து உயிர்களுக்கும் ஒரே ஆன்மா என்ற கருத்துக்களை உள்ளிட்ட 'அத்வைதம்' என்ற தத்துவம். இந்த 'அத்வைதம்' முழுமையான கற்பனை. இந்த அத்வைத வாதிகளோ அனைத்துக் கோயில்களுக்கும் செல்கின்றனர். பாதாதிகேசம் கேசாதிபாதம் என்று அங்கம் அங்கமாக வருணித்து போற்றி வாசகங்கள் கூறிப் பூசை செய்கின்றனர். ஒவ்வொரு கோயிலின் காலம், இறைவனனின் வாழ்க்கை வரலாறு, தோற்றம், வடிவம், ... என்றும் பல கூறியும் வருகின்றனர். ... இது எவ்வளவு பெரிய சூழ்ச்சி?*

## காலடி ஆதிசங்கரன் ஒரு தமிழனே!

ஆதிசங்கராச்சாரியார் என்பவர்கள் பதினெண்சித்தர்களின் நெறிப்படி சத்தி வழிபாடு, கன்னிப்பூசை, தாய்வழிபாடு ... முதலிய பூசைகளைச் செய்பவர்களேயாவார்கள். இவர்களில் ஞானசித்தர்களும் தோன்றுவதுண்டு. இப்படித் தோன்றும் 'ஞானசித்தர்கள்' உலகியலுக்காகவாவது பெயரளவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அதாவது, இல்லறத்தை ஏற்றவர்களாக இருக்க வேண்டும். அல்லது 'கூடுவிட்டுக் கூடு' பாய்ந்து வேறு உடல்களிலிருந்து பெண்ணின்பத்தைத் துய்த்து பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதத்துக்குரிய இல்லற வாழ்வை ஏற்றவர்களாக ஆக வேண்டும். மேற்படி நெறிப்படி தோன்றி செயல்பட்ட 'காலடி ஆதிசங்கரன்' தென்பாண்டித் தமிழனே.


ஆதிசங்கரர் தானே எழுதிய சௌந்தர்யலகரியில் தம்மை ஒரு தமிழன் என்று குறிக்கின்றார். (இலகரி = இலாகிரி = மயக்கும் பொருள்).

சௌந்தர்ய லகரியில் 75வது சூத்திரத்தில் "... தவஸ்தன்யமன்யே" என்று தொடங்கி "திராவிட சிசு ராஸ்வாத்ய தவயத் கவீனல் ப்ரௌடானு மஜனி கமனீயா கவயிதா" என்று முடிகிறது.

இச்சூத்திரத்திலிருந்து நாம் உணர வேண்டிய கருத்தாவது "மலைமகளே, உன்னுடைய பால் ஹ்ருதயத்திலிருந்து உதிர்த்த அமிர்த பிரவாகமோ! சரசுவதியே, பாலாகப் பெருகி வருகிறாளோ! கருணையுடன் நீ கொடுத்த பாலைப் பருகிய திராவிடக் குழந்தை சிறந்த கவிஞர்களுக்குள் உயர்ந்த கவியாக ஆனான்..." என்பதேயாகும்.

இதனுடைய உரைநூல் ஒன்று 'திராவிட சிசு' என்பதை காலடி ஆதிசங்கரரையே குறிக்கின்றது என்று கூறுகின்றது. மற்றபடி பல உரைகள் அச்சொல், கருணீக்க வேளாளர் குலத்துத் தோன்றிய ஆதிசங்கரரையும், திருஞானசம்பந்தரையும் இராமலிங்க அடிகளாரையும் குறிக்கும் என்கின்றன.

காலடி ஆதிசங்கரர் தாந்தரீக சித்தியாளனுகவும், மாந்தரீக வல்லியாகவும் விளங்கியதால் தம்மை ஆதரித்துப் போற்றிய பிருமணர்களும், சமசுக்கிருத மொழியும் கருவறைக்குள், கோயில்களுக்குள் நுழைய வேண்டும் என்பதற்காக பல கோயில் தெய்வங்களைக் கட்டி அடக்கினுர். அதனுல், பிருமணர்கள் அவரைப் போற்றி மகிழ்ந்து தங்களின் தலைவனுக ஏற்றனர். இன்று அவரைப் பிருமணராகக் கூறி வருகின்றனர். இதனைக் கண்டிப்பதற்காகத்தான் சத்தி வழிபாட்டின் சாரமாக சமசுக்கிருத மொழியில் தாம் எழுதிய சௌந்தரியலகரியில் 75வது சூத்திரத்தில் சமசுக்கிருத மொழிக்கே உரிய 'திராவிட சிசு' என்ற சொல்லால் தன்னை ஒரு தமிழன் என்று குறித்து வெளிப் படுத்துகின்றுர். இதனை விடப் பெரிய சான்று என்று வேறு என்ன வேண்டும்?



**குவலய குருபீடம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரர்**

## சின்னச் சின்னச் செய்திகள்!

- காலடி ஆதிசங்கரர் காசியிலிருந்த போது கரூரிலிருந்து காக்கையரின் வேளாளர் குடியைச் சேர்ந்த சந்தானம் என்பவர் தேடிவந்து அடியானுக மாறினுர்.
- சந்தானத்தின் ஆழமான தமிழ்ப் புலமையையும், விரிவான இந்துமத இலக்கிய அறிவையும் உணர்ந்து போற்றி அவரைத் தலைமை மாணுக்கராக ஏற்றுர் ஆதிசங்கரர். சமசுக்கிருத மொழிக்கு ஏற்ப அவரின் பெயரை சனந்தா (சுனந்தா) என்றழைத்தார். மற்றவர்கள் சனந்தர் என்றே அழைத்தனர்.
- கங்கையின் ஒரு கரையில் சனந்தர் இருந்தபோது, குருவான ஆதிசங்கரர் மறுகரையில் இருந்து அழைத்த போது, வெள்ளப் பெருக்கின் மீது தனது தவ வலிமைப் பயிற்சியால் நடந்து வந்தபோது இவரின் திருப்பாதங்கள் தண்ணீரில் மூழ்கிடாமல் திடீர் திடீரென்று தோன்றிய அருட் தாமரை மலர்களால் தாங்கப் பட்டன. இது கண்டு வியந்த ஆதிசங்கரர் இவரை 'அருட்தாமரைப் பாதர்' என்று அழைத்தார். இப்பெயரும் சமசுக்கிருத மொழிக்கேற்ப 'பத்மபாதர்' எனப்பட்டது.
- ஆந்திர கர்நூல் மாவட்டத்திலுள்ள சைலம் கோவிலில் தங்கி ஆழ்ந்த தவத்தில் ஆழ்ந்து சிவானந்தலாகிரி என்ற நூலை எழுதிக் கொண்டிருக்கும் போது அவரைப் பலியிட்டு சித்திகள் பெற அவரிடமே அனுமதி பெற்ற உக்கிரபைரவன் என்பவன் அவரைக் கொலை செய்ய வாளை ஓங்கினுன். உடனே, முதல் மாணுக்கனும், மெய்க் காவலனுமாகிய சந்தானம் அவனுடன் போரிட்டு கொன்று ஆதிசங்கரரைக் காப்பாற்றினுர்.

- பூரியிலுள்ள (ஒரிசா) கோவர்த்தன மடமான ‘விமலா பீடத்தை’ தனது மூத்த மாணுக்கனுன சனந்தரிடம் ஒப்படைத்தார் ஆதிசங்கரர். மெய்யான இந்துமதக் கருத்துக்களை சமசுக்கிருதத்தில் ஆதிசங்கரர் மொழி மாற்றம் செய்வதற்குப் பேருதவியாய் இருந்த சனந்தரிடம் ஒப்படைத்ததால், அம்மட செயல்பாடுகள் யாவும் தமிழகத்தின் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டே பூசைகள் நிகழ்ந்தன. இன்னும் அவ்வாறே விளங்கக் காணலாம். மெய்யான இந்துமத மடமாக உள்ளது பூரிமடம்.

- ஆதிசங்கரர் ‘சௌந்தர்யலகரி’ மற்றும் ‘சிவானந்தலகிரி’ என்னும் நூலை எழுதினுர். இவ்விரண்டும் பதினெண்சித்தர்களின் இந்துமதச் சாரமே ஆகும். ‘சௌந்தர்யம்’ என்ருல் அழகு என்ருகும். இலாகரி என்ருல் மயக்கப் பொருளைக் குறிக்க கூடியது. ‘மனம் இலகுவாதல்’ என்ருல் சுமையற்று இருத்தல், கவலைகள் மறத்தல், மயங்கித் தூங்குதல் என்பது பொருளாகும். ‘இலகு’ என்பதே வேர்ச்சொல் (Root Word). ‘இலகு’ என்னும் அடிப்படைச் சொல்லைக் கொண்டு பிறந்ததே இலாகிரி என்னும் சொல்லாகும். எனவே, ‘சௌந்தர்ய இலாகிரி’ என்னும் ஆதிசங்கரர் குறிப்பிட்ட சொல் அழகிய தமிழ்ச்சொல்லே!

- ‘காசுமீர குருவழி ஆச்சாரியார் மண்டன மிச்சுரருடனும் அவரது மனைவியான சரசவாணியுடனும் வாதிட்டவர் ஆதிசங்கராச்சாரியார் அல்ல; சிவபத்தியில் சிறந்த சங்கராச்சாரியாரே’ என்ற குறிப்பும்; ‘இல்லையில்லை, சரசவாணியுடன் வாதிட்டது ஆதிசங்கராச்சாரியாரே யாவார்!’ என்ற குறிப்பும் ஆக இருவேறு குறிப்புகள் உள்ளன.

- சரசவாணியோடு வாதிட்டபோது இல்லறம் என்னும் அகத் துறையின் மோகம், ஈகம் (மணம்), போகம், தாகம் என்னும் நான்கினுக்கும் பதில் சொல்ல முடியாமல் திணறினுர்.

- இல்லற இன்பம் காண திடீரென்று மாண்ட காசி மன்னன் அமருகனின் உடலில் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து 48 நாட்களுக்கு மேல் அரசியுடனும், மற்றையோருடனும் இன்பம் துய்த்து அரண்மனையில் இருந்தார் ஆதிசங்கரர். ஈக, போக, தாகங்களை அனுபவித்தார் ஆதிசங்கரர்.

- ஆதிசங்கரரின் உடலை தீவைத்துக் கொளுத்த முயன்ற போது மீண்டும் தன் உடலில் புகுந்து தீப்புண்களுடன் உயிர் தப்பினுர். இடுப்புக்குமேல் பகுதிகள் தீக்காயங்களுக்கு உள்ளாயின. பின்னர் அவர் தனது தவறுணர்ந்து இமயமலை நோக்கி இறுதி சித்திப் பயணம் மேற்கொண்டார்.

- சிருங்கேரி, பூரி, துவாரகை, பத்ரிநாத் ஆக நான்கு மடங்களும் காலடி ஆதிசங்கராச்சாரியாரால் **துவக்கப்பட வில்லை**. **(ஏற்கனவே இருந்த பீடங்களைப் புத்துயிர்ப்புச் செய்தார். விளக்கம் 13ஆம் பக்கத்தில்.)**

- உலககுரு, சகடகுரு, (லோககுரு, சகத்குரு) என்ற தமிழ்ச் சொல்லின் உண்மைப் பொருளை உணர்ந்து ஏற்றவர் ஆதிசங்கரர். அதாவது, பெண்ணின்பத்தைத் துய்த்தவர்களே இக் குரு நிலையில் நின்று செயல்படலாம். ஆனுல், துறவறத்தை மேற் கொண்டுள்ள இன்றைய சங்கராச்சாரியார்கள் லோககுரு, ஜகத்குரு என்று வைத்துக் கொண்டுள்ளது சிரிப்புக்கிடமாகும்.

- சரசவாணி இல்லறம் பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு பெண்ணின்பம் துய்த்த பின்னரே ஆதிசங்கரர் பதில் அளித்ததால்

அவருக்கு ‘சரசுவதி’ என்றும் ‘சர்வக்ஞர்’ என்றும் பட்டங்கள் வழங்கினர். இதை உணராமல் தாங்களும் (இன்றைய சங்கராச்சாரியார்களும்) இப்பட்டங்களை வைத்துக் கொண்டிருப்பது கேலிக்குரியது என்பது சங்கர மடத்தாருக்குத் தெரியாதோ?

- இராமநாதபுர மாவட்டத்தில் தாயுமானவ சாமிகள் தவநிலையில் ஆழ்ந்திருந்த போது அவருக்கு இட்ட நெருப்பு அவரின் காலைச் சுட்டு கருக்கியது. பின்னர் தமிழ் மந்திரத்தால் நலமடைந்தார். இவரைப் போலவே (தமிழ் மந்திரத்தால்) ஞானசித்தரான ஆதிசங்கரர் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து பெண்ணின்பம் துய்த்த போது தமது தமிழ் மந்திற வலிமையை உலகுக்கு எடுத்துக் காட்டவே உடலின் மேற்பகுதி தீச் சுட்டுக் கரியாக்கும் வரை அமைதியாக இருந்தார். பின்னர் தன்னுடலில் புகுந்து, சுட்ட புண்களை தமிழ் மந்திறம் கூறி நலமாக்கிக் கொண்டு இமயமலை போந்தார்.

----------------------

**எங்களுக்குத் தெரியும்! உங்களுக்கு!?....**

*ஆதிசங்கரர் இந்தியாவில் நான்கு மடங்களை நிறுவினர் என்பது வரலாறு. இன்றும் கூட, இந்தியாவில் உள்ள நான்கு பிருமணச் சங்கராச்சாரியார்களும் காஞ்சி மடத்துச் சங்கராச்சாரியாரை ஏற்பதே இல்லை. தங்களில் ஒருவராகக் கருதுவதுமில்லை. கும்பகோணத்தில் தோன்றிய சங்கர மடச் சத்திரத்தின் தொடர்புடைய 300 ஆண்டு வரலாறு கொண்டதே இன்றைய காஞ்சி சங்கரர் மடம். ஆதிசங்கரருக்கும் காஞ்சி மடத்துக்கும் தொடர்பு இல்லை. ஆதாரங்கள் உள்ளன.*

**சித்தரடியான் நிலை விளக்கம் ...**

“அருளாட்சிக்கு அடிப்படை அவரவருக்குள் இருக்கின்ற இருளை அகற்றிக் கொண்டு தலைவனும் தானும் ஒன்றே என்று எப்போதும் வாழும் பக்குவம் பெற்ற அடியான்களை ஆயிரக்கணக்கில் உருவாக்குவதுதான்”;

“துள்ளுகிற மாடு பொதி சுமக்காது என்பது போல் படபடப்பாகப் பேசிக் காட்டாறு போல் திட்டமின்றி முரட்டுத் தனமாகச் செயல்படுபவர் அருளுலகில் தொடர்ந்து வாழவே மாட்டார்கள்! அருளைப் பெறவே மாட்டார்கள்”;

“தன்னை, தனது உணர்வு, அறிவு, ஆர்வம், மரியாதை, மதிப்பு, பெருமை, செல்வம், கல்வி, புகழ், உறவு, உரிமை, ... முதலிய அனைத்தையும் குருவுக்கே உண்மையில் காணிக்கையாக்கியவனே பக்குவம் பெற்ற சித்தரடியானாக நிலைத்து நிற்க முடியும்”;

“அடியான்களை உருவாக்குவது அரிதினும் அரிது, பெரிதினும் பெரிது, ஆபத்திலும் ஆபத்து, அழிவிலும் அழிவு, நலிவிலும் நலிவு, ... என்பதை உணர்ந்தே நாயன்மார்களும், ஆழ்வார்களும், அடிகளார்களும் , சித்தியாளர்களும், பீடாதிபதியைத் தவிர்த்த மற்ற சித்தர்களும் ... அடியான்களை உருவாக்குவதே இல்லை... அருளாட்சி முயற்சி செய்யும் பீடாதிபதிகளே துணிந்து அடியான், அடியாள், அடியார், ஆர்வலர், விருப்பாளர், ஏந்து நல்குவோர், ... என்று பலவகை நிலையினரையும், பத்தியால் சித்தி பெறுவோரையும் உருவாக்குவர். இவ்வியப்பு மிகு சாதனைகள் பதினெண்சித்தர் பீடாதிபதிகளுக்கே உரியவை; பதினெண்சித்தர் பீடாதிபதிகளே பரந்த கடலில் நீந்திக் கரை சேருவது போல் அடியான்களிடையே செயல்பட்டு செல்வர்”;

**குருபாரம்பரியம், குருவாசகம், குருவாக்கு, திருவாசகம், திருவாக்கு, கருவாசகம், கருவாக்கு, குருமார் ஒழுக்கம், ... முதலிய பல நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள்.**

## உலககுரு சகடகுரு

உலக குரு, சகட குரு என்று பதினெண் சித்தர்களால் குறிக்கப்படும் சொற்கள் சமசுக்கிருதத்தில் லோககுரு, ஜகத்குரு என்று இன்றைய காஞ்சிமடத்து சங்கராச்சாரியார்களால் குறிக்கப்படுகின்றன.

உலகம் = இம்மண்ணுலகைக் குறிக்கிறது.

உலக + குரு -> லோக குரு

இம்மண்ணுலகப் பயிரின உயிரினங்களோடு இரண்டறக் கலந்து வாழ்ந்து அநுபவிக்க வழிகாட்டியாக இருப்பவர்.

மண், பெண், பொன் ... அனைத்தையும் ஏற்று அநுபவிப்பவரே.

சகடம் = இயங்கிக் கொண்டே இருக்கும் இம்மண்ணுலகமும் மானுட வாழ்வையும் குறிக்கும்.

இம்மனித வாழ்வைத் தாங்கிச் செல்லும் வண்டி போன்று இருப்பவரைக் குறிக்கும்.

சகட + குரு -> சகத்குரு.

இப்பொருளிலேயே பதினெண்சித்தர்கள் ஆதிசிவாச்சாரியார், ஆதிபரமாச்சாரியார், ஆதிசங்கராச்சாரியார், ஆதிஈசுவராச்சாரியார் எனும் நான்கு ஆச்சாரியார்களுக்கு மட்டுமே உலககுரு, சகத்குரு என்ற பட்டங்களை வழங்கியுள்ளனர். இதைப் புரிந்து கொள்ளாமல் பிருமணர்கள் தங்களின் கற்பனையான துறவுக் கோலக் காலடி ஆதிசங்கராச்சாரியாரைப் பின்பற்றித் தோற்றுவித்துக் கொண்ட ஆச்சாரியார்களுக்கும் உலககுரு -> லோககுரு, சகட குரு -> சகத்குரு = ஜகத்குரு என்று சமசுக்கிருத மொழி ஒலிக்கேற்ற 'லோககுரு', 'ஜகத்குரு' என்ற சொற்களை உருவாக்கிக் கொண்டார்கள்.

குறிப்பு:-

1. உலககுரு, சகடகுரு என்பவர்கள் பெயரளவிலாவது திருமணம் செய்திருக்க வேண்டும்.

2. கூடுவிட்டுக் கூடு பாய்ந்தாவது; அருவுருவ நிலையிலாவது பெண்ணின்பம் துய்த்திருக்க வேண்டும்.

3. ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீகப் பூசைகளைச் செய்ய வேண்டும்.

4. மோக, போக, வேக, தாக நுட்பங்களை உணர்ந்திருக்க வேண்டும்.

5. காம சாத்திற, சாத்திர, சாத்தர, சூத்திற, சூத்திர, சூத்தரங்களில் தேர்ந்திருக்க வேண்டும்.

ஆனால், துறவியாக, பிரம்மச்சாரியாக வாழும் இன்றைய சங்கராச்சாரியார்கள் தங்களை லோககுரு (உலககுரு), ஜகத்குரு (சகட குரு) என்று குறிப்பது தவறே! கேலிக் கூத்தே!

---

**எங்களுக்குத் தெரியும்! உங்களுக்கு!?....**

*சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் தஞ்சை சரபோசி மன்னர் காலத்தில் திருக்கடையூர் கோயிலில் வாழ்ந்த 'அபிராமி பட்டர்' என்னும் அருளாளர் தமது 'அபிராமி அந்தாதி' என்ற அருட்பாவினால் அமாவாசை நாளில் முழுநிலவைத் தோற்றுவித்தார் என்று வரலாற்றுச் செய்தியே போதும், அருளுலகத்துக்கு பொய்யான ஹிந்துமதமும் சமசுக்கிருதமும் தேவையற்றது, பயனற்றது ... என்பது தெரியும்.*

# காலடி ஆதிசங்கராச்சாரியாரின் திருவுருவத் தோற்றம்

பிற்காலச் சோழப் பேரரசின் [கி.பி.785-1040] தந்தையான பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் மகன் கருவூர்த் தேவருக்கும், முதலாம் இராசேந்திர சோழன் மகளுக்கும் பிறந்த திருமாளிகைத் தேவர் எழுதிய குருபாரம்பரிய வாசகங்களில் காலடி ஆதிசங்கராச்சாரியார் பற்றிய குறிப்புக்கள் நிறைய இருக்கின்றன.

திருமாளிகைத் தேவர் தமது குருபாரம்பரிய வாசகங்களில்; காலடி ஆதிசங்கராச்சாரியார் ஒரு தமிழர்; இவர் கருணீக்க சைவ வேளாள குலத்தில் தோன்றியவர்; இவரது முன்னோர்கள் சீர்காழியில் உள்ள சிவன் கோயிலில் பணியாற்றி வரும் சிவாச்சாரியார்களேயாவார்கள். அதாவது, இவர் சீர்காழிச் சிவாலயத்தில் உள்ள குரு, குருமார், குருக்கள், அந்தணர், ஆச்சாரியார்... என்ற அருளுலகப் பட்டங்களைப் பெற்றிட்ட சைவ வேளாள மரபில் தோன்றியவர். இவர் ஆலமர் கடவுட் புதல்வனை முருகப் பெருமானின் திருத்தோன்றலாக, பதிலியாகப் பிறப்பெடுத்த சமயக்குரவர் திருஞானசம்பந்தரின் மறுபிறப்பாகத் தோன்றியவரேயாவார். இவர் சிவனின் தோன்றலாகவோ, வடிவாகவோ அல்லது பதிலியாகவோ தோன்றவில்லை, தோன்றவில்லை, தோன்றவில்லை, தோன்றவேயில்லை. இவர், தமிழ்மொழியில் மிகுந்த ஆழமான புலமை பெற்ற பிறகே பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத்திற்கு உரியவைகளைப் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் சமசுக்கிருத மொழியில் மொழிபெயர்த்து பல இலக்கியங்களை உண்டாக்கினார். இவர் பதினெண்சித்தர்களின் அருளுலக இலக்கண இலக்கியங்களின் படி உச்சிக் குடுமியராகத் தாடிமுடியுடன் வாழ்ந்தார். இவர் தனக்கு முன் தோன்றி வாழ்ந்திட்ட 31 ஆதிசங்கராச்சாரியார்கள் அந்தணர் வடிவிலே வாழ்ந்து வெள்ளாடை மேனியராக, உச்சிக் குடுமியராக, நூல் அணிந்தோராக, மாந்தரீக வல்லியாக, தாந்தரீகச் சித்தியாளராக, வேத சித்தராக விளங்கியது போலவே தானும் விளங்கினார். இவர் திருமந்திரத்தையும், திருக்குறளையும் தமது கண்ணெனப் போற்றினார் என்பதாலும்; இவர் திருமந்திரம் கூறும் அந்தணர் தோற்றத்தையே பெற்றிருந்தார்.

***"நூலும் சிகையும் நுவலிற் பிரமமோ***
***நூலது கார்பாச நுண்சிகை கேசமாம்***
***நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்***
***நூலுடை அந்தணர் காணும் நுவலிலே"***

**[திருமந்திரம் -230]**

இதன்படி இவர் உச்சிக்குடுமியராகவும், பூணூல் அணிந்தராகவும், வெள்ளாடை மேனியராகவும், திருநீறு, குங்குமம், சாந்து, சந்தனம், மஞ்சள் எனும் ஐந்தினையும் அணிந்தே திருக்கோலக் காட்சியினராக அல்லது திருக்கோல வடிவினராக விளங்கினார் என்ற பேருண்மைகள் தெளிவாகத் தெரிகின்றன. ஆனால், இவர் மொட்டையடித்துக் கொண்டு காவி கட்டிக்கொண்டு பூணூல் இல்லாமல் திருநீறு மட்டும் பூசிக்கொண்டு காட்சியளித்ததாக நான்கு மடத்து மடாதிபதிகளும் பிருமண சந்நியாசிக் கோலத்தில் வாழ்ந்து காட்டுகிறார்கள். இதனை, ஏமாளிகளான அப்பாவிகளான எனது தாய்நாட்டு மக்கள் நம்புகிறார்கள். இதற்கென்ன செய்வது? என்னால் முயன்றவரை என் தாத்தாவின் குருவாக்கு, குருவாக்கியம்,

குருவாசகம், குருபாரம்பரியம் எனும் நான்கிலிருந்தும் எண்ணற்ற வாசகங்களைச் சான்றாகவும், ஊன்றாகவும் எடுத்துக் காட்டி உண்மையை விளக்கினாலும் நம்புவாரில்லை.

'காலடி ஆதிசங்கராச்சாரியார் ஒரு தமிழன் தான்' என்ற கருத்து எப்படி முழுமையாகவும் முதன்மையாகவும் விளக்கி யுரைக்கப்பட்டிடல் வேண்டுமோ அதைவிட மிகமிக முழுமையாகவும், முதன்மையாகவும் விளக்கியுரைக்கப் பட வேண்டிய செய்தி என்னவென்றால்; அது ஆதிசங்கராச்சாரியார் மொட்டையடித்துக் கொண்டு, காவி கட்டிக்கொண்டும், குங்குமம், சாந்து, சந்தனம், மஞ்சள் அணியாமல் திருநீறு மட்டும் அணிந்தும் பூணூல் இன்றியும் **பிறமண சந்நியாசிக் கோலத்தில் வாழ்ந்தார் என்பதை மறுப்பதேயாகும்.**

ஏனெனில், பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதப்படி சந்நியாசிகளே கிடையாது, கிடையாது, கிடையாது, கிடையவே கிடையாது. எனவே, காலடி ஆதிசங்கராச்சாரியாருக்கு ஒரு சந்நியாசிக் கோலத்தை வழங்கித்தான் இந்தப் பிற மண்ணினரான பிறமணர்கள் அவரைத் தங்களுடைய பிறமணப் பீடாதிபதியாக, குருவாக ஆக்கிக் கொண்டார் என்பது வெளிப்படுத்தப் பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

பிறமண்ணினரான பிறமணர் எனும் வட ஆரியர்களின் வேதமதத்துக்கும், வேத நாகரீகத்துக்கும், சமசுக்கிருத மொழிக்கும் மூலாதாரமாக, ஆரம்பமாக அடிப்படையாக, குருவாக, குருபீடமாக, தலைமையாக விளங்குவது காலடி ஆதிசங்கராச்சாரியார்தான். **இவருக்கும் இந்தப் பிறமணர்களுக்கும், பிறமண வேதமதத்துக்கும், சமசுக்கிருதத்துக்கும் சம்பந்தமில்லை, சம்பந்தமில்லை, சம்பந்தமில்லை, சம்பந்தமேயில்லை** என்ற கருத்தை முடிவாகவும் தெளிவாகவும் வலியுறுத்தி விளக்கி யுரைப்பதின் மூலம் தான் பிறமணருடைய பொய்யான ஹிந்துமதத்தை முறியடிக்க முடியும், முறியடிக்க முடியும், முறியடிக்க முடியும். அதாவது, பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதத்திற்கு மறுமலர்ச்சி வேண்டுமென்றால் இந்த **மெய்யான இந்து மதத்தின் கருத்துக்களையும் செய்திகளையும்தான் காலடி ஆதி-சங்கராச்சாரியார் சமசுக்கிருத மொழியில் சுருக்கி எழுதினார் என்ற பேருண்மை**யை விளக்கி யுரைத்து அனைவரும் புரியும் வண்ணம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் வட ஆரிய மாயை அகலும்; வேதமத இருள் அகற்றப்பட்டிடும், பிறமண ஆதிக்கம் ஒழிக்கப் பட்டிடும், சமசுக்கிருத மொழியின் மோகம் தணிக்கப் பட்டிடும், பிறமணச் சாத்திரிகளின் சுரண்டல்கள் தடுக்கப்பட்டிடும், தடுக்கப் பட்டிடும், தடுக்கப் பட்டிடும்.....' என்ற திருமாளிகைத் தேவரின் குருபாரம்பரிய வாசகங்கள் கூட அன்றிலிருந்து இன்றுவரை தமிழர்களின் அறியாமையை அகற்றவில்லை, அடிமைப் புத்தியை நீக்க வில்லை, பொய்யான ஹிந்து மதத்தின் மாயைகளிலிருந்து தமிழரை விடுவிக்கவில்லை.

எனவேதான், மோகனூர் உருத்திரம் பிள்ளையும், கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியாரும், திருமாளிகைத் தேவர் அவர்களின் வாசகங்களையே கொள்கை விளக்கங்களாகவும், குறிக்கோள்வாசகங்களாகவும் பயன்படுத்தி மெய்யான இந்துமதத்தின் விடுதலைக்காக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள். ஆனால், இந்த இரண்டு நூற்றாண்டுக்குள்; ஆங்கிலேயரின் தயவால் கும்பகோணத்துச் சங்கர மடத்துத் தலைவர், காஞ்சி காமாட்சியம்மன் கோயில் அறங்காவலர் பொறுப்பை பெற்றதன் மூலம் காஞ்சியிலும் ஓர் ஆதிசங்கராச்சாரியார் மடத்தை உருவாக்கி

விட்டார். அதாவது, ஆதிசங்கராச்சாரியார் என்ற பெயரைத்தான் பிற மண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள் தங்களுடைய கோட்டையாகவும், கோட்டையின் பாதுகாப்பு அரணுகவும், தங்களைப் பாதுகாக்கும் கவசமாகவும், கேடயமாகவும், எதிரியைத் தாக்கும் போர் ஆயுதமாகவும் பயன் படுத்துகிருர்கள், பயன் படுத்துகிருர்கள், பயன் படுத்துகிருர்கள்.

அதாவது இன்னும் சிறிது காலம் போனுல்; இமயமலைக்குச் சென்று நிறைவெய்திய காலடி ஆதிசங்கராச்சாரியார் இந்தக் காஞ்சிபுரம் காமாட்சி யம்மன் கோயிலில்தான் மறைந்தார் என்று கதைகட்டி விட்டால் கூட நமது அப்பாவித் தமிழர்கள் நம்புவார்கள், நம்புவார்கள், நம்புவார்கள். எனவேதான், பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதத்திற்கும், இந்தப் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்களின் பொய்யான ஹிந்துமதத்திற்கும் இடையே நிகழ்ந்து வரும் அனைத்து வகையான போட்டா போட்டிகளையும், போர்களையும், சண்டை சச்சரவுகளையும், விளக்குகின்ற மறுமலர்ச்சிப் பணிக்கு மையமாகவும், அடிப்படையாகவும், உள்ளீடாகவும், உட்கிடக்கையாகவும், கொள்கையாகவும், குறிக்கோளாகவும் இருக்க வேண்டியது தென்பாண்டித் தமிழனை காலடி ஆதிசங்கரனுடைய வரலாறும், வாழ்வியல் சாதனைகளும், போதனைகளும்தான் என்ற கருத்து திருமாளிகைத் தேவர் முதல் யாம் வரை வலியுறுத்திக் கூறப்படுகின்றது.

இதனை இந்த இருபதாம் நூற்ருண்டுத் தமிழர், இந்தியாவில் வாழும் பிருமணரல்லாதவர், உலகெங்கும் வாழும் மெய்யான இந்துக்கள் எப்படி ஏற்றுப் போற்றிப் புரிந்து பயன்படுத்திக் கொண்டாலும் சரியே. ஆனுல், மீண்டும் மீண்டும் சேரநாட்டுக் **காலடியில் கருணீக்கச் சைவ வேளாள மரபில் சமயக் குரவர் திருஞானசம்பந்தரின் மறுபிறப்பாகத் தோன்றிய 32வது ஆதிசங்கராச்சாரியார் ஒரு தமிழரே** என்ற மெய்யான கருத்துத்தான் பதினெண் சித்தர்களின் இந்துமதத்தில் புகுந்துள்ள வட ஆரிய மாயை, வேத மத மாயை, சமசுக்கிருத மாயை, பிருமண மாயை, பிருமண ஆபாசக் கற்பனை, பிருமணச் சுரண்டல், பிருமண ஆதிக்கம், ... முதலியவைகளால் ஏற்பட்டுள்ள இன்னல்மிகு இருளை அகற்ற முடியும், அகற்ற முடியும், அகற்ற முடியும் என்ற பேருண்மையை மட்டும் வலியுறுத்திக் கொள்ள விரும்புகிறேன் நான்.

ஏனெனில், இன்றைக்கு ஒரு கணிசமான அளவு தமிழர்கள் தாய்மொழிப் பற்றும், இனப்பற்றும், இன ஒற்றுமையும், இன ஒருமைப்பாடும், இன விடுதலையும், மொழியுரிமையும், பண்பாட்டு ஆட்சி மீட்சியும்,,, தேவையில்லை, தேவையில்லை, தேவையில்லை என்ற கருத்தைப் பரப்பித் தமிழினத் துரோகிகளையும், விரோதிகளையும் அதிகமாக உருவாக்கி வருகிருர்கள். இந்தச் சுயநல வெறிபிடித்த பேராசைக் கார மானங்கெட்ட பிறவிகளிடமிருந்து மெய்யான இந்துமதத்தைக் காப்பாற்றும் பணி தப்பிப் பிழைப்பது எப்படி? எப்படி? எப்படி? எப்பொழுது? எப்பொழுது? எப்பொழுது? என்ற விஞக்களுக்குத் தமிழினத்தின் இளைய தலைமுறையினர்தான் பதிலைக் காண வேண்டும். ஏனெனில், தமிழினத்தின் இளைய தலைமுறையினர்தான் தங்களுடைய உரிமைகளையும், பெருமைகளையும் அந்நியர்களிடமிருந்தும், துரோகிகளிடமிருந்தும், விரோதிகளிடமிருந்தும் மீட்டுத் தரவேண்டும். இதற்கு இந்து மறுமலர்ச்சி இயக்கம் ஒன்றுதான் தலைமை தாங்கி வழிகாட்டிட முடியும்! வழிகாட்டிட முடியும்! வழிகாட்டிட முடியும்!

திருமாளிகைத் தேவர் கணிசமான அளவு எண்ணிக்கையுள்ள பிருமணர்களை 'பிருமணத் தமிழர்கள்' என்றும், 'தமிழரானவர்கள்' என்ற பெயரில் சித்தரடியான்களாக, சித்தரடியாள்களாக, சித்தரடியார்களாக உருவாக்கினூர். இவர்களின் மூலம் இமயம் முதல் குமரி வரையிருந்த 'பொய்யான ஹிந்துமதத்தின் தலைவர்களாகவும், இயக்கச் சத்திகளாகவும் விளங்கிய சமசுக்கிருத வெறிபிடித்த பிருமணர்களைத் திருத்தும் பணியில் ஈடுபட்டார். அப்பொழுது, பிருமணர்கள், கருணீக்கச் சைவ வேளாளர் குலத்தில் தோன்றிய 32வது ஆதிசங்கராச்சாரியார் பீடமான காலடி ஆதிசங்கராச்சாரியாரைச் சமசுக்கிருத வெறி பிடித்த பிருமணர்கள் சூழ்ச்சியாகத் தங்களுடைய பிருமண குலத்தைச் சார்ந்தவர் என்று கதைகட்டி ஏமாற்றிய விவரங்களைத் தெளிவாகக் குறிக்கிறூர். அதாவது, திருமாளிகைத் தேவர் மிகுதியாகத் தமது குருபாரம்பரியத்தில் பிருமணர்களின் தவறுகளையும், சூழ்ச்சிகளையும், சுரண்டல்களையும், ஏமாற்றுக்களையும் எண்ணற்ற முறை கடுமையாக விமர்சிக்கும் போது சேரநாட்டுக் காலடியில் சீர்காழியிலிருந்து வந்து குடியேறிய சிவாச்சாரியாரின் மகனூகப் பிறந்த ஆதிசங்கராச்சாரியார் பற்றி மிகுதியாகச் செய்திகளையும், கருத்துக்களையும் வெளியிடுகிறூர்.

பிருமணர்களைப் பற்றி அதிகமாகப் பச்சையாகவும், கொச்சையாகவும் விமர்சிக்கும் திருமாளிகைத் தேவர் பிருமணர்களின் தலைவராகவே விளங்கினூர். அதாவது, ஒரு பெரிய கணிசமான அளவு பிருமணர்கள் திருமாளிகைத் தேவரின் மாணூக்கர்களாகத் தயாராகி இந்து மறுமலர்ச்சி இயக்கப் பணிகளில் ஈடுபட்டிட்டார்கள். இவர்கள் முழுக்க முழுக்க பிருமணர்களால் மெய்யான இந்து மதத்திற்கு ஏற்பட்ட கேடுகளைத் தடுக்கும் பணியிலும், அகற்றும் பணியிலும் ஈடுபட்டிட்டார்கள். எனவேதான், திருமாளிகைத் தேவர் பிருமணர்களைப் பற்றி மிகுதியான விமரிசனங்களை வழங்கினூர். அவற்றுள் ஒன்று, தனது தாத்தாவால் உருவாக்கப்பட்ட சீர்காழி சிவாச்சாரியார் பரம்பரையைச் சார்ந்த சிவகுரு எனும் சிவாச்சாரியாரின் மகனூகக் காலடியில் தோன்றிய 32வது ஆதிசங்கராச்சாரியார் பீடமான காலடி ஆதிசங்கராச்சாரியார் பற்றிய பொய்யான தவறூன பிழையான மாயமான இருட்டடிப்பான கருத்துக்களையும், செய்திகளையும் கடுமையாகத் தாக்கி விமரிசித்து எழுதுவது.

அதாவது, இவருடைய குருபாரம்பரிய வாசகங்களில்தான் காலடி ஆதிசங்கராச்சாரியார் பற்றிய செய்திகள் நிறைய இருக்கின்றன. அவற்றைப் பட்டியலிட்டுப் பல ஆயிரம் பக்கமுள்ள நூலாகவும் வெளியிடலாம். ஆனூல், அப்படியொரு நூலை வெளியிடுவதற்கு முன்னூல் இம்மண்ணுலகம் தோன்றிய காலத்திலிருந்து வாழையடி வாழையாகத் தோன்றிவரும் பதினெண்சித்தர்களின் பரம்பரையிலே; பதினூோராவது பதினெண்சித்தர் பீடமாக, அருளுலகின் பேரரசாக திறல்மிக்க வேந்தராக, அருட்பேரரசின் அரியணையில் அமர்ந்திட்ட தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங் கரைக் கருவூரூரின் பேரனூகத் தோன்றிய இவர், தன்னுடைய தாத்தாவின் வாழ்வியல்களையும், வரலாற்றுப் புகழ் மிக்க சாதனைகளையும், வையகம் புகழ் போதனைகளையும், வீரதீரமிக்க நிகழ்ச்சிகளையும், விவேகம் மிக்க அரசியல் சித்தாந்தங்களையும் பயன்மிக்க சமுதாய மாற்றச் சிந்தனைகளையும், உயிர்த் துடிப்பு மிக்க சமய தத்துவ விளக்கங்களையும் உருவாக்கிய நானூவித கலைஞர்களையும், படைப்பாற்றலின் மிகப்பெரிய செயல்வடிவங்களான கலைப்பொருள்களையும், கலைக் கருவூலங்களையும் ... பற்றி எழுதப்

புகாமல் அல்லது எழுத முன்வராமல் இமயம் கடந்தும், குமரிமுனை கடந்தும், சிந்துவைக் கடந்தும், பிறம்மபுத்திராவைக் கடந்தும் உலகப் பேரரசாக விளங்கும் சோழப் பேரரசின் பல நூறாயிரம் போர்வீரர்களின் ஆயுதப் பயிற்சிக்கும், பல்லாயிரக்கணக்கான யானை, குதிரை முதலியவைகளின் பயிற்சிக்கும், போர்ப்படைத் தளபதிகளின் தனித்திறனுக்கும் ... முழுக்க முழுக்கக் காரணமாக இருந்திடும் தனது தந்தை கருவூர்த் தேவரின் போராட்டங்கள் மிகுந்த வாழ்வியல் சிந்தனைகளையும், போதனைகளையும் பற்றி எழுதப் புகாமல்; அவரது செல்வமகன் செல்லமகன் திருமாளிகைத் தேவன் தாய்நாடு விட்டும் குருமொழி மறுத்தும் இமயமலையில் சென்று நீள்தவத்தில் ஆழ்ந்து நிறைந்திட்ட காலடி ஆதிசங்கராச்சாரியார் பற்றி மிகுதியாக எழுதப் புகுந்தது ஏன்? ஏன்? ஏன்? ... என்பன போன்ற வினாக்களுக்கு விடை காண முயலும் போதுதான் காலடி ஆதி-சங்கராச்சாரியார் பற்றிய பொய்யான வரலாற்றுச் செய்திகள்தான் பிறமண்ணினரான பிராமணர் எனும் வட ஆரியர்களின் உயிர்நாடி! உயிர்நாடி! உயிர்நாடி! அடிப்படை! அடிப்படை! அடிப்படை! என்ற பேருண்மை விளங்கிடும்.

பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோற்றுவித்த (1) 48 பீடங்கள், (2) 48 மடங்கள், (3) 48 அமளிகைகள், (4) 48 இருக்கைகள், (5) 48 திருவடிகள் எனும் ஐந்து வகையான அருளுலக அரியணைகள், அருளுலக அரச பரம்பரைகள் ... முழுமையாக மெய்யான இந்துக்களால் மறக்கப்பட்டு விட்டன! மறக்கப்பட்டு விட்டன! மறக்கப்பட்டு விட்டன! அதாவது, 'நமசிவாய என்ற ஐந்தெழுத்துத்தான் பதினெண்சித்தர்களின் சித்தர் நெறியான இந்துமதம்' என்ற தத்துவப்படியே பதினெண்சித்தர்கள் தங்களுடைய சித்தர் நெறியெனும் அருளுலகிற்கு ஐந்து வகையான ஞானவேந்தர்களை, மடம், பீடம், அமளிகை, இருக்கை, திருவடி என்ற பெயர்களில் உருவாக்கினார்கள். சித்தர்நெறிக்கே உரிய மரபுப்படி இந்த ஒவ்வொரு வகையிலும் இந்த நான்கு யுகங்களையும் ஆளுவதற்கு நாற்பத்தெட்டு ஞானவேந்தர்கள் தோன்றிடும் செயல்திட்டங்களையும் வகுத்திட்டார்கள். அதாவது இந்த மண்ணுலகில் இளமுறியாக் கண்ட காலத்திலிருந்து புதிதாகத் தோன்றக்கூடிய மண்ணுலக ஆண்டுவரை காலப்போக்கில் தோன்றிடக் கூடிய அருளாளர்கள் பயன்படுத்திக் கொள்வதற்காகவே 48 பீடங்களையும், 48 மடங்களையும், 48 இருக்கைகளையும், 48 திருவடிகளையும், ... உருவாக்கினார்கள். இவை பற்றிய பேருண்மைகள் அனைத்தும் வைகையாற்றங் கரையிலிருந்த மூன்றாவது தமிழ்ச் சங்கத்தைப் பிறமண்ணினரான பிராமணர்கள் எனும் வட ஆரியர்கள் எரித்து அழித்ததோடு சிதைந்து சீரழிந்து போயின. இவை பற்றி அமராவதியாற்றங்கரைக் கருவூராரின் சில குறிப்புக்கள் தவிர வேறு சான்றுகள் இல்லை.

எனவேதான் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் தன் காலத்து திருஅருட் பிறப்பெடுத்த காலடி ஆதிசங்கரரை பாலகப் பருவத்திலிருந்தே தன்னுடைய நேரடிப் பார்வையில் தயாரித்து இம் மண்ணுலகில் எங்கெங்கு பீடங்கள் இருக்கின்றன என்று கண்டுபிடித்து அதைப் புத்துயிர்ப்பு செய்யும்படி ஆணையிட்டார். ஆனால், காலடி ஆதிசங்கரரோ தன்னால் இவ்வளவு பெரிய பணியை முழுமையாக நிறைவேற்றிடுவதற்காக நெடுங்காலம் வாழ இயலாது என்று மறுத்து விட்டார். அதாவது, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் காலடி

ஆதிசங்கரரை 128 ஆண்டுகள் வாழுமாறு ஆணையிட்டதை காலடி ஆதிசங்கரர் முழுமையாக மறுத்து விட்டார்.

அதன்பிறகே ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் அவரை 96 ஆண்டுகள் அல்லது 64 ஆண்டுகள் வாழுமாறு கேட்டுக் கொண்டார். ஆனால், அவரோ தன்னால் 32 ஆண்டுகள் மட்டும்தான் வாழமுடியும் என்று கூறிவிட்டார் என்பதால்தான் இந்தியாவிற்குள் இருக்கின்ற மடங்களில் உலகியலின்படி மிகமிகத் தேவையான மடங்களை யெல்லாம் புத்துயிர்ப்புச் செய்யும்படி ஆணையிட்டார். காலடி ஆதிசங்கராச்சாரியாரும் 32 ஆண்டுகளுக்குள் குறைந்தது 32 பீடங்களையாவது புத்துயிர்ப்புச் செய்ய வேண்டுமென்று முடிவெடுத்துச் செயல்பட்டார். ஆனால், நான்கு பீடங்களே [1. பத்திரிநாத்து, 2. துவாரகை, 3. பூரி, 4. சிருங்கேரி] முழுமையாகப் புத்துயிர்ப்புப் பெற்றன.

**இந்த மாபெரும் வரலாற்றுப் பேருண்மையினைச் சிதைத்துச் சீரழித்த பிருமணர்கள் காலடி ஆதிசங்கராச்சாரியார் தோற்றுவித்தது நான்கே நான்கு பீடங்கள்தான் என்று வறட்டுப் பிடிவாதமாகச் சாதித்து விட்டார்கள்.** இதனால், பீடம், பீடாதிபதி, மடம், மடாதிபதி என்ற சொற்களின் வரலாறுகளும் அவற்றிற்குரிய தத்துவ சித்தாந்த விளக்கங்களும் மறைந்தொழிந்தன. இதனால், பதினெண்சித்தர்கள் தோற்றுவித்த மெய்யான இந்துமதம் மாபெரும் குழப்பங்களையும், இழப்புக்களையும், சிதைவுகளையும், சீரழிவுகளையும், திருத்தல்களையும், திருப்பங்களையும் பெற்று விட்டது, பெற்று விட்டது, பெற்று விட்டது. அதாவது, பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத்துக்குரிய காலடி ஆதிசங்கராச்சாரியார் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்களின் பொய்யான ஹிந்துமதத்திற்கு உரியவராக்கப் பட்டுவிட்டார். உரியவராக்கப் பட்டுவிட்டார், உரியவராக்கப் பட்டுவிட்டார். இவற்றை யெல்லாம் எண்ணித்தான் திருமாளிகைத் தேவர் காலடி ஆதிசங்கராச்சாரியாரைப் பொய்யான ஹிந்துமதத்தின் பிடியிலிருந்து விடுவித்து அவரை மெய்யான இந்துமதத்திற்கு உரியவராக்கும் பணியில் ஈடுபட்டிட்டார் என்ற வரலாற்று உண்மையை இந்நாடு உணர்ந்தால் போதும்.

---

**எங்களுக்குத் தெரியும்! உங்களுக்கு?...**

*காவியுடையும் துறவறமும்தான் சமய நெறி என்று பொய்யான ஹிந்து மதவாதிகளால் உருவாக்கப்பட்டு விட்டதால் அதை முறியடிக்க வேண்டிய கட்டம் வந்தது. கி.பி.16ஆம் நூற்றுண்டில் காவிரியாற்றங்கரைக் கருவூரரின் குருவழி வாரிசுகளில் தோன்றிய அகத்தியர் என்பவர் பொய்யான ஹிந்து மதத்துக்கு பதிலடி கொடுக்க வேண்டி, மக்களின் போக்கிலேயே சென்று திரும்ப வேண்டி காவியுடையையும் துறவறத்தையும் உண்மையான இந்துமதத்தில் கொண்டு வந்தார். அதன்படி முதன்முதலாக தருமபுர ஆதினத்தை உருவாக்கினர். தன்னிடமிருந்த திருஞான சம்பந்தர் என்பவரை 'திருஞானசம்பந்த மூர்த்தி' என்று பட்டம் வழங்கி முதல் ஆதினமாக, மடாதிபதியாக உருவாக்கினர். ஆனால், இம்மடாலயங்களும், மடத் துறவிகளும் 'வந்த வேலையை விட்டு பந்தக்காலை பிடித்த கதையாக' உண்மையான இந்துமதத்தின் கருத்துக்களை மக்களிடையே கூறாமல், பொன்னுக்கும் பெண்ணுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டு மடத்தின் உள்ளேயே மக்கள் தொடர்பற்று வாழ்ந்திட்டனர். இதனால், தமிழர்களின் ஒற்றுமையும், இந்துமதமும் பாழ்பட்டன.*

## தமிழர்கள் மறுசிந்தனே

**இந்து வேதம்! இந்து மதம்!!**
**பிழைக்க! தழைக்க!! உழைக்க!!!**
**அழைக்கிறோம்! அழைக்கிறோம்!**
**வாரீர்! வாரீர்!! வாரீர்!!!**

**அருளியவர்:**

***ஞானாச்சாரியார்***

... ... ... ... ... ... ... ... ...

8) **சித்தர் கருவூறார் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம்**

(i) இது இந்துமத மறுமலர்ச்சிக்காகவும், இந்துவேதம் பரப்பப் படுவதற்காகவும், இந்துமத இலக்கியங்கள் வாழ்வியல்கள் முதலியவைகளே விளக்குவதற்காகவும், இந்துக்கள் என்று சொல்லப் படுபவர்கள் அனைவரும் அடிக்கடி ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட தலைமையின் கீழ் ஒன்றுகூடி இந்துமதம் பற்றிச் சிந்தனைகள் செய்யவும், கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடல்கள் நிகழ்த்தவும், பொது விழாக்கள் கொண்டாடவும், அமாவாசையில் இறந்தோருக்காக **'முன்னோர் வழிபாடும்'**, முழுநிலவு நாளில் **கருவறைகள் இல்லாத கடவுள்கள் வழிபாடும்** நிகழ்த்துவதற்காகவும் உருவாக்கப் படுகின்ற ஒன்றாகும்.

(ii) **இந்தக் கருவூறார் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம் ஓர் ஊருக்கு ஒரே ஒரு அமைப்புத்தான் உண்டு.** இந்த அமைப்பில் ஏறத்தாழ ஓர் ஊரில் உள்ள எல்லாக் குடும்பத்தவர்களும் தங்கள் தங்கள் குடும்பத்தில் உள்ள பிறந்த குழந்தை முதல் அனைவரையும் உறுப்பினராகச் சேர்க்க வேண்டும். அதாவது ஓர் ஊரில் உள்ள பிறந்த குழந்தை முதல் பெரியவர் வரை தங்கள் சார்பாக ஓரே ஒரு ரூபாய் வாழ்நாள் முழுவதற்குமுரிய ஆயுள் சந்தாவாகக் கட்டினால் போதும், உறுப்பினராகி விடுவார்கள். இப்படி **ஒவ்வோர் ஊரிலும் உள்ள இந்துக்கள் அனைவரும்** இந்த அமைப்பில் உறுப்பினராகிட வேண்டும்.

(iii) இந்த சித்தர் கருவூறார் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தில் சேருகின்ற அனைவரும் இந்துக்களாக இருத்தல் வேண்டும். இதில் சாதி வேறுபாடு கிடையாது. நாத்திகர், ஆத்திகர், மதமறுப்பாளர், வெறுப்பாளர், எதிர்ப்பாளர், ... முதலிய எந்த வேறுபாடுகளும் கிடையாது. இந்துக்களாக இருக்கும் அனைவரும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள்.

(iv) இந்த அமைப்புக்கும் பதினெண் சித்தர்களின் நிறுவன நிர்வாகக் கட்டமைப்புச் சட்டப்படி 12 பேர்கள் 12 பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டே அனைத்துச் செயல்களும் செயல்திட்டங்களும் நிறைவேற்றப்படும்.

(v) **செயல்திட்டம்:**

அ) பதினெண்சித்தர் மடத்திலிருந்து அருளாளர்களே வரவழைத்து ஊரில் உள்ள கோயில்களுக்குப் புத்துயிர்ப்புச் செய்தல், புதுக் கோயில்களுக்கு உயிர்ப்புச் செய்தல், நின்று போன திருவிழாக்களே நடத்துதல்;

ஆ) பதினெண்சித்தர் மடத்திலிருந்து பேச்சாளர்களே வரவழைத்து இந்துவேத விளக்கக் கூட்டங்கள், இலக்கியக் கருத்தரங்குகள் முதலியவற்றை நிகழ்த்துதல்;

இ) பதினெண்சித்தர் மடத்திலிருந்து அருட்கலை வல்லார்களே வரவழைத்து ஓகம், யோகம், ஞானம், தவம், பூசை, குண்டலினி, சேவலோன் உடற்பயிற்சிக் கலைகள், ... முதலியவைகளைப் பயிற்றுவிக்கக் கூடிய **'குறுகிய கால அருட்பயிற்சி முகாம்கள்'**, **'நிலையான அருட்பயிற்சிப் பள்ளிகள்'** முதலியவைகளே உருவாக்குதல் அல்லது செயலாக்குதல்.

ஈ) அந்தந்த ஊரிலுள்ள ஊரின் சுற்றுவட்டாரத்திலுள்ள கோயில்களில் சிறப்புத் திருநாள்களில், திருவிழாக் காலங்களில் உழவாரப் பணி செய்து கோயில்களை தூய்மைப் படுத்தியும், அழகு படுத்தியும் பாதுகாத்தல்;

உ) மாதாமாதம் அமாவாசை நாளில் பகலில் இறந்தவர்களின் ஆவி, ஆன்மா, ஆருயிர் நற்பேறு பெறுவதற்காக **'முன்னோர் வழிபாடு'** என்பதை ஏதேனும் ஒரு பொது இடத்தில், கோயிலில், வெட்டவெளியில், தோப்பில், ஆற்றங்கரையில், ஏரிக்கரையில், கடற்கரையில் என்று ஏதேனும் ஓர் இடத்தில் நிகழ்த்தலாம். இந்த வழிபாடு பெரும்பாலும் காலையிலோ அல்லது மதியத்திலோ நிகழ்த்தப் படுவதுதான் மரபு. இதேபோல், கருவறை, வெட்டவெளிக் கருவறை, வழிபாட்டு நிலையக் கருவறை, கோயில் மூலக் கருவறை எனும் நான்கு வகைப்பட்ட கருவறைகளில் எந்த ஒரு கருவறையிலும் நிலையாகத் தங்காமல் வாழக் கூடிய கடவுள்களுக்கும், கடவுள் நிலை பெற்றவர்களுக்கும் சேர்த்துக் கொண்டாடப் படும் **'பருவபூசை வழிபாடு'** என்ற கடவுள்கள் வழிபாடு முழுநிலவு நாட்களில் நிலவு தோன்றிய பிறகு அந்தந்த ஊராரின் வசதி வாய்ப்புப் படி மாலையில் துவங்கி இரவில் கொண்டாடப் படுவது; இப்படி அமாவாசை நாளில் முன்னோர் வழிபாடும், முழுநிலவு நாளில் பருவபூசை வழிபாடும் கொண்டாடுவதின் மூலம் ஊரிலுள்ள எல்லாப் பொதுமக்களும் உலகியலுக்கு அப்பாற்பட்ட ஆவி, ஆன்மா, ஆருயிர் முதலியவைகளின் துணைகளையும், அனைத்து வகைப்பட்ட கடவுள்களின் துணைகளையும் பெற்று; அவற்றின் மூலம், 'உளநலம்', 'உயிர் நலம்', 'உடல் நலம்' முதலியவைகளைப் பெற்று நல்வாழ்வு வாழ முடியும்.

குறிப்பு:- a) இந்தப் பருவபூசை விழா பெரும்பாலும் எல்லா வகைப்பட்ட கோயில்களிலும் கொண்டாடப் படுவதே மரபு. ஆனால், **பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைப் பெற விரும்புகின்ற** தனிமனிதரோ அல்லது கூட்டத்தாரோ தங்கள் தங்களுடைய வசதி வாய்ப்பு விருப்பங்களுக்கேற்ப எங்கு வேண்டுமானாலும் கொண்டாடலாம்.

b) இந்த **முன்னோர் வழிபாடும் பருவபூசை வழிபாடும் மிகக் குறுகிய கால அளவில் மிகப் பெரிய பெரிய பயன்களைத் தர வேண்டுமென்றால் அந்தந்த ஊரில் உள்ள சுடுகாடு, புதைகாடு, அருளாளர்களின் சமாது முதலிய இடங்களில்தான் கொண்டாடப் பட வேண்டும் என்று இந்து வேதம் கூறுகிறது**. அதாவது, இந்துவேதத்தில் கல்லறைத் திருவிழாவும், கடவுளர் திருவிழாவும்; நீத்தார் நினைவுநாளும் முன்னோர் வழிபாடும்; 'இறந்தவர்களில் கடவுள்களாக ஆகாதவர்களின் (மாறாதவர்களின்) வழிபாடும், கடவுள்களாக ஆனவர்களின் (மாறியவர்களின்) வழிபாடும் ... என்ற தலைப்புக்களில் இந்து வேதத்தில் ஆங்காங்கே **'அமாவாசைப் பூசையும், முழுநிலவுப் பூசையும்'** பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

இ) பதினெண்சித்தர் மடாதிபதியையோ அல்லது அவரது பதிலிகளையோ அல்லது அவரது வாரிசுகளையோ ஊராரின் வசதி வாய்ப்புப்படி ஆண்டுக்கு ஒருமுறையோ அல்லது இருமுறையோ தங்கள் தங்கள் ஊர்களுக்கு வரவழைத்துப் போதிய பொருளாதார வசதி வாய்ப்புக்கள் இல்லாத ஏழை எளிய பாட்டாளிப் பாமர மக்களும் அருளுலகப் பயிற்சிகளைச் செய்வதற்குரிய **குருவழித் தீட்சை**யை அல்லது குருவருளைப் பெறுமாறு செய்தல்; முடிந்தால் குருவால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்கப் பெறுதல்; குருவின் அருளுரையைக் கேட்டல், குருவிடமிருந்து அருளூறு பூசனைப்

பொருள்களைப் பெறுதல்; குருவை வணங்கி வாழ்த்துப் பெறுதல்; ... முதலியவை ஒவ்வொரு ஊரிலும் ஆண்டுக்கு ஒருமுறையாவது அல்லது சில ஆண்டுக்கு ஒருமுறையாவது நிகழுமாறு செய்தல், நிகழுமாறு செய்தல், நிகழுமாறு செய்தல்.

9. பரிந்துரை: இவ்வரிய செயல்திட்டங்களை எண்ணிப் பார்த்து நமது இயக்கத்தவர்கள், வாரவழிபாட்டினர், அருட்கோட்டத்தவர், ... முதலிய அனைவரும் மிகப்பெரிய பெரிய முயற்சிகளைத் தங்களால் இயன்றவரை செய்து அவரவர் வசதி வாய்ப்புக்களுக்கேற்ப எத்தனை ஊர்களில் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களை உருவாக்க முடியுமோ அத்தனை ஊர்களில் உடனடியாக அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களை உருவாக்கும் பணியில் ஈடுபட வேண்டும், ஈடுபட வேண்டும், ஈடுபட வேண்டும் என்பது **அருளாணை பெற்ற குருவாணை**யாகும். அதனால்தான், நம்மவர்கள் அனைவருமே அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களை உருவாக்கும் அருட்பணி விரிவாக்கத் திட்ட மைய அமைப்புச் செயலாளராகச் செயல்பட வேண்டும் என்று அருளுலகத்தவர் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். அதாவது, **அருளுலகத்தவர்கள், இந்து வேத மதமான இந்துமதத்தின் நாற்றங்காலாக, தாய்வீடாக, கருவறையாக, காப்பகமாக இருக்கின்ற தமிழகத்துக்குள் இந்துவேதமும், இந்துவேதத்தின் செயல்வடிவான இந்துமதமும் விழிச்சி பெற்று எழிச்சியுற்று மிகப் பெரியபெரிய பயிற்சிகளைச் செய்து அரிய பெரிய முயற்சிகளை மேற்கொண்டு உயர்ச்சியினை எய்தி செழிச்சி அடைந்து செயல்பட ஆரம்பித்திட்டால்தான் இந்துமதம் யாண்டும் பரவியுள்ள குமரி முதல் இமயம் வரை விரிந்து கிடக்கும் இந்துமத இந்தியாவில் மாற்று மதங்களுக்கிடையில் ஒண்டி ஒதுங்கிப் பதுங்கிக் கிடக்கும் நிலையில் மாற்றம் ஏற்பட்டு இந்துமதம் ஆட்சி மீட்சி பெறும்! இந்துமதம் ஆட்சி மீட்சி பெறும்!! இந்துமதம் ஆட்சி மீட்சி பெறும்!!!**

10. அப்படி, இந்துமதம் தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்து ஆட்சி செய்து கொண்டிருந்த தொன்மைமிகு பழம்பெரும் இந்திய நாட்டுக்குள் மீண்டும் ஆட்சி மீட்சி பெற்றிட்டால்தான்; இந்த இந்துமதத்திற்குரிய இந்துவேதம் எது?! இந்த இந்துமதத்திற்குரிய இந்துவேதம் எங்கே?! இந்த இந்துமதத்திற்குரிய இந்துவேதம் என்னவாயிற்று??, இந்த இந்துமதத்திற்குரிய இந்துவேதம் எப்படி மறைந்தது? அல்லது எவரால் மறைக்கப்பட்டது?, இந்த இந்துமதத்திற்குரிய இந்துவேதம் எவ்வாறு மறக்கப்பட்டது? அல்லது மறக்கடிக்கப்பட்டது? இந்த இந்துமதத்திற்குரிய இந்துவேதம் எப்பொழுதிருந்து இல்லாமல் போயிற்று?!; அப்படி இந்த இந்துமதத்திற்கு இந்துவேதம் இல்லாமல் போனதிலிருந்து இந்துமதம் என்னவாயிற்று?! அதனால், யார் யாருக்கு என்னென்ன இழப்புக்களும், ஈட்டங்களும் விளைந்தன!? விளைந்தன!? விளைந்தன!? ... என்ற வினாக்களுக்கெல்லாம் இன்றுள்ள தன்னம்பிக்கையுள்ள மெய்யான இந்துமதப் பற்றுள்ள இந்துக்கள் மட்டுமின்றி இந்த உலகம் முழுவதுமுள்ள **'அருளுலக ஈடுபாட்டாளர்கள்', 'அருளுலக ஆராய்ச்சியாளர்கள்', 'அருளுலக ஆதரவாளர்கள்', 'அருளுலகப் பயிற்சி முயற்சிக் கலைஞர்கள்', 'வரலாற்றுத்துறை வல்லுநர்கள்', 'மனித சமுதாய இயல் அறிஞர்கள்', 'மானுட நல மேம்பாட்டுத் துறையைச் சேர்ந்த அறிவியல் மேதைகள்', 'உலக இலக்கியத் துறை வித்தகப் பேரறிஞர்கள்', 'உலக மத ஆராய்ச்சி வல்லுநர்கள்'** ... முதலியோர் அனைவரும் இந்துவேதம் எங்கே!? எங்கே!?!? எங்கே!?!?!?; இந்துவேதம் எப்படி யிருக்கும்?!

எப்படியிருக்கும்??!! எப்படியிருக்கும்???!!!; இந்துவேதம் எதையெதைப் பற்றி என்னென்ன சொல்லுகிறது?! எதையெதைப் பற்றி என்னென்ன சொல்லுகிறது??!! எதையெதைப் பற்றி என்னென்ன சொல்லுகிறது???!!! இந்துவேதம் குறிப்பிட்ட தமிழ்மொழிக்கு மட்டும் உரியதா?! தமிழினத்துக்கு மட்டும் உரியதா??!! தமிழ்நாட்டுக்கு மட்டும் உரியதா?! இந்தியாவின் எல்லைக்கு மட்டும் உட்பட்டதா?! ஆசியாக் கண்டம் வரை பயன்படக் கூடியதா?! கீழைய நாடுகளுக்கு மட்டும் பயன்படக் கூடியதா?! உலகம் முழுவதற்கும் பயன்படக் கூடியதா?! இன்றைய விஞ்ஞான வளர்ச்சிகள் மிகுந்த புதுமை உலகுக்குப் பயன்படக் கூடியதா?! என்றென்றும் நின்று நிலவி உலக மக்கள் எல்லோருக்கும் பயன்படக் கூடியதா?! ... என்றெல்லாம் வினாக்களை எழுப்பி எழுப்பிச் சிந்தித்திடுவார்கள். வினாக்களை எழுப்பி எழுப்பிச் சிந்தித்திடுவார்கள், வினாக்களை எழுப்பி எழுப்பிச் சிந்தித்திடுவார்கள். அப்படிப் பலரும் சிந்திப்பதன் மூலம்தான் இந்து வேதத்தின் வளர்ச்சி அணைகட்டித் தேக்கி வைக்கப்பட்ட தண்ணீர் அணையை உடைத்துக் கொண்டு வெகுவேகமாகப் புறப்பட்டு எங்கும் பரவுவது போல் மிகமிக வேகமாக உலகெங்கும் பரவிடும், பரவிடும், பரவிடும். அப்படி இந்துவேதம் உலகம் முழுவதும் பரவினால்தான்; உலகம் முழுவதும் இன விடுதலை, மொழி விடுதலை, நாட்டு விடுதலை, ... முதலிய பல விடுதலைகள் பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கிடும். அப்படி விடுதலை யுணர்வுகளும், விடுதலை வாழ்வுகளும் உலகெங்கும் பரவினால்தான் பதினெண்சித்தர்கள் இந்துவேதத்தின் மூலம் சாதிக்க விரும்புகின்ற உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் உருவாகிடும். அதற்காகத்தான், இந்துவேத மாநாட்டின் மூலம் அருளுலகத்தவர்கள் வழங்கியுள்ள செயல்திட்டங்களில் அல்லது அறிவித்திட்ட முடிவான தீர்மானங்களில்; "... உடனடியாகப் பதினெண்சித்தர் மடத்தைச் சேர்ந்த அனைவரும் தங்கள் தங்களால் இயன்ற மிகப்பெரிய முயற்சிகளைச் செய்து தமிழகத்தில் உள்ள குக்கிராமங்கள், கிராமங்கள், பட்டிதொட்டிகள், சிற்றூர்கள், ஊர்கள், பேரூர்கள், நகரங்கள், மாநகரங்கள், ... முதலிய அனைத்து இடங்களிலும் **'அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களை'** உருவாக்க வேண்டும், உருவாக்க வேண்டும், உருவாக்க வேண்டும் என்ற அருளாணை வழங்கி, அதனை அருளாணை பெற்ற குருவாணையாக வழங்கும் படிச் செய்துள்ளார்கள்! செய்துள்ளார்கள்!! செய்துள்ளார்கள்!!!

---

**எங்களுக்குத் தெரியும்! உன்களுக்கு? ...**

*பல ஆண்டுகளுக்கு முன்னால் வெளிவந்த 'ஆதிபராசத்தி' படத்தில் சமசுகிருதத்தின் ஏமாற்றுத்தனத்தை மிக எளிமையாக விளக்கிக் காட்டினார்கள். அதாவது, 'ஆதிபராசத்தி' பூசைக்கு வர வேண்டும் என்று ஆரிய வேத விற்பன்னர்கள் சமசுகிருத மொழியில் பூசை செய்து கொண்டிருக்கும் போது சாதாரண மீனவன் தமிழ்ப்பாடலைப் பாடக் கேட்டு நேரில் தோன்றி அருள் தருகின்றாள். "தமிழ்மொழிக்கு அருளாற்றல் உண்டு, சமசுகிருதத்திற்கு இல்லை" என்பதை மிக அழகாக எடுத்துக் காட்டிய உண்மை எத்தனை பேருக்குப் புரிந்தது?*

## ஏசுநாதர் வரலாறு

குருபாரம்பரியத்தில்தான் ஏசுநாதர் வரலாறு மிகத் தெளிவாகவும் முழுமையாகவும் கூறப்படுகின்றது. ஏசுவை ஈசா, ஈசுவரன், ஈசன், தேவகுமாரன், சித்தர் குருவழி வாரிசு, ஞானசித்தர், நவநாத சித்தர், சீவன்முத்தர், ... என்று பல பெயர் சொற்களால் குறிப்பது தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் ஏசுவிடம் எவ்வளவு அன்பும் பற்றும் பாசமும் மரியாதையும் பெருமிதமும் கொண்டிருந்தார் என்ற பேருண்மை விளங்கிடுகின்றது.

"உலகம் முழுவதும் அருளாட்சி அமைக்க 'அற்புதங்களை', 'மாயங்களை', 'வியப்புக்களை', 'இயற்கை யிறந்த செயல்களை', 'அதிசயங்களை', ... செய்வதன் மூலம் முயற்சித்த ஈசா மாண்டார், மீண்டார், அருளாளர்களை ஆண்டார்..." என்ற குருபாரம்பரிய வாசகம் அருளாட்சி அமைக்க முற்படுபவர்களுக்கு **ஒரு சிறந்த அறிவுரையாகவே** நிற்கின்றது.

அதாவது, எந்த ஒரு தனிமனிதன், தன்னுடைய சித்து விளையாடல்களை மட்டும் நம்பியோ; 'அருட்சித்திக் கொடைச் செயல்களை' நம்பியோ உலகியலில் பெரிய மாற்றங்களைச் செய்ய விரும்பினால், அவன் எதிர்ப்பும், ஏமாற்றமும், ஏளனமும், ஏச்சும், பழியும், அழிவுமே அடைய நேரிடும்' என்ற தத்துவ விளக்கமே குருபாரம்பரியத்தால் வழங்கப் படுகிறது.

இந்த உலகிலேயே 'குருபாரம்பரியம்' என்ற பெயரால் மத வரலாறும் (Religious History), 'அரசபாரம்பரியம்' என்ற பெயரால் அரசியல் வரலாறும் (Political History), இலக்கிய பாரம்பரியம் என்ற பெயரால் இலக்கிய வரலாறும் (History of Language and Literature) மிகத் தெளிவான காலக் கணக்கீட்டு முறைப்படி (With a chronological approach) எழுதிக் கொடுத்திருப்பவர்கள் பதினெண்சித்தர்கள். 'இந்த உலக வாழ்வை அல்லது மனித வாழ்வை அல்லது சமுதாய அமைப்பை நிர்ணயிப்பதும், நிர்ணயம் செய்வதும் 1.மதம், 2.அரசியல், 3.இலக்கியம் என்கின்ற முக்கோணக் கோட்டுக்குள் அடங்கிடும் முக்கோண பீடமேயாகும்' என்று மிகத் தெளிவாக விளக்கி யிருக்கிறார்கள்.

இந்தத் தெளிவுமிக்க பதினெண்சித்தர்களின் நெடிய பாரம்பரியத்தின் வாரிசாக வந்திருப்பவரே தான் என்ற உணர்வில் செயல்படுபவரே நமது குருதேவர். எனவேதான், அவர் தான் எழுதிய தன்னுடைய சொந்த வாழ்க்கைக் குறிப்பேடுகளை (The diary), அஞ்சல் தொகுதிகளை நமது தலைமைச் செயலகத்தில் ஒப்படைத்து விட்டார். யார் வேண்டுமானாலும் அவற்றைப் படித்துப் புரிந்து கொள்ளட்டும் என்ற துணிவோடு வாழ்ந்து வருகிறார். மேலும் அவர் தன்னுடைய வாழ்க்கையை தெய்வீக சோதனை (The Test of Divinity) என்று அறிவிப்பு செய்திருக்கிறார். இவற்றிற்கெல்லாம் மேலாக அவர் தன்னுடைய வாழ்க்கை வரலாறு தனிமனித வரலாறாகவோ, நாட்டின் வரலாறாகவோ, உலக வரலாறாகவோ அமையாமல் அது மானுட இனத்தின் முழுமையான வரலாறாக இருக்கும் (The Complete and Full History of the Mankind) என்று அறிவிப்பு செய்திருக்கிறார். ... ...

